**தமிழ்நாடு அரசு**
**தொழில்நுட்பக் கல்வித் துறை, சென்னை – 600 025.**
**வணிகவியல் பாடங்களில் அரசு தொழில்நுட்பத் தேர்வுகள் பிப்ரவரி 2026**

**சுற்றறிக்கை எண் DOTE/923/2026-T2 நாள் 06-05-2026**
**தேர்வு முடிவுகள் மற்றும் மறுமதிப்பீடு அறிவிக்கை**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அரசு தொழில்நுட்பக் கல்வித் துறையினால் நடத்தப்பட்ட தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வுகளில் கலந்து கொண்ட, அரசு அங்கீகாரம் பெற்ற தட்டச்சுப் பயிலகங்கள் மற்றும் தனித்தேர்வர்கள், தங்களின் தேர்வு முடிவுகளை tndtegteonline.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மறுமதிப்பீடுக்கான தேர்வுத்தாள் நகல் (Scanned Copy) பெறுவது மற்றும் மறுமதிப்பீடு செய்வதற்கு, tndtegteonline.in என்ற இணையதளத்தில் இணையவழி மூலமாக விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

**இணையதளம் வழியாக விடைத்தாள் நகல் பெறுவதற்கு மற்றும் மறுமதிப்பீடு செய்ய விரும்புபவர்களுக்கான முக்கிய தேதிகள்**

| வ.எண் | விவரம் | நாள் |
|---|---|---|
| 1 | இணையதளம் மூலம் விடைத்தாள் நகல் கோரும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான தொடக்க தேதி | 08.05.2026 |
| 2 | இணையதளம் மூலம் விடைத்தாள் நகல் கோரும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான கடைசி தேதி | 14.05.2026 |
| 3 | இணையதளம் மூலம் மறுமதிப்பீட்டுக்கு விண்ணப்பிப்பதற்கான தொடக்க தேதி | 15.05.2026 |
| 4. | இணையதளம் மூலம் மறுமதிப்பீட்டுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி | 21.05.2026 |

**முக்கிய அறிவுரைகள்**

1. இணையதளத்தின் மூலம் முழுமையாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்ப எண் பெறப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
2. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் அவர்களின் பாடப்பிரிவு மற்றும் அதன் நிலையை சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பம் சமர்ப்பித்தபின் பாடப்பிரிவு மற்றும் நிலை மாற்ற விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.
3. விடைத்தாள் நகல் கோருதல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஒன்றிற்கு மேல் கூடுதலான பாடங்களுக்கும் ஒரே விண்ணப்பமாக சமர்ப்பிக்கலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

4. இணையதளத்தின் மூலம் விடைத்தாள் நகல் கோரும் விண்ணப்பதாரர்கள் பாடம் ஒன்றுக்கு ரூ.150/- வீதம் (முதல் தாள் மற்றும் இரண்டாம் தாள் சேர்த்து) இணையதளத்தில் Online மூலம் Payment gateway வழியாக செலுத்த வேண்டும்.
5. மறுமதிப்பீடு கோரும் விண்ணப்பதாரர்கள் தட்டெழுத்து பாடம் ஒன்றுக்கு ரூ.400/- (முதல் தாள் மற்றும் இரண்டாம் தாள் சேர்த்து) சுருக்கெழுத்து & கணக்கியல் பாடம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் (முதல் தாள் மற்றும் இரண்டாம் தாள் சேர்த்து) இணையதளத்தில் Online payment gateway வழியாக செலுத்த வேண்டும்.
6. **இணையதளத்தின் மூலம் விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப் படுவார்கள். (விடைத்தாள்களின் நகல் பெறவும், மறுமதிப்பீடு செய்யவும் தனித்தனியான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)**
7. முழுமையாக விண்ணப்பத்தை சமர்ப்பித்தவர்களுக்கு விடைத்தாள் நகல் தாங்கள் விண்ணப்பம் சமர்ப்பித்த இணையவழியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

8. விண்ணப்பத்தை சமர்ப்பிக்காமல் பணம் செலுத்தி யிருந்தாலோ, வேறு ஏதேனும் காரணத்திற்காகவோ அல்லது தவறாக பணம் செலுத்தியிருந்தாலோ, எக்காரணத்தை கொண்டும் செலுத்தப்பட்ட பணம் திரும்ப வழங்கப்படாது.
9. மறுமதிப்பீட்டிற்கான தேர்வு முடிவுகள் தொடர்பான விவரங்கள் **tndtegteonline.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்படும்.

10. **கடைசி நாள் வரை விண்ணப்பம் சமர்ப்பிக்கும் வழக்கத்தை தவிர்க்குமாறு தெரிவித்துக்கொள்ளப் படுகிறது.**

11. விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாளன்று பிற்பகல் 05.00 மணிக்கு பின் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க இயலாது.

**ஒம்/- Dr S VISAKAN**
**தேர்வு வாரியத் தலைவர்**

**GOVERNMENT OF TAMILNADU**

**DIRECTORATE OF TECHNICAL EDUCATION,
CHENNAI - 600 025.**

**GOVERNMENT TECHNICAL EXAMINATIONS IN COMMERCE SUBJECTS - FEBRUARY - 2026**

**CIRCULAR NO. DOTE/923/2026-T2 DATED 06-05-2026**

# REVALUATION NOTIFICATION

Candidates who have written the Government Technical Examinations, FEBRUARY 2026 (Typewriting, Shorthand and Accountancy) through Government approved Commerce (Typewriting) Institute and also the Private Candidates can download their results from tndtegteonline.in website. Interested candidates can apply online for scanned copy of the answer scripts and Revaluation using the website tndtegteonline.in

## IMPORTANT DATES FOR THOSE WHO SEEK PHOTO COPY OF THE ANSWER SCRIPTS AND REVALUATION

| S.No | Details | Date |
|---|---|---|
| 1. | Commencement Date for filling Application seeking scanned copy of answer paper through online | 08.05.2026 |
| 2. | Last date for filling application seeking scanned copy of answer paper through online | 14.05.2026 |
| 3. | Starting date to apply for Revaluation through online | 15.05.2026 |
| 4. | Last date to apply for Revaluation through online | 21.05.2026 |

## IMPORTANT INSTRUCTIONS FOR FILLING ONLINE APPLICATION

1. Only the applications which are completely submitted will be considered for further process. Applications without Application Number will not be accepted.

2. The candidates should clearly mention the subject and grade for which they apply. The request for the subject and grade change will not be entertained after submission of the application.

3. If the candidate requires scanned copy of answer paper or Revaluation for more than one subject, they can apply in the same application

4. Candidate has to pay Rs.150/- as fee per subject (both first & second paper) for the scanned copy of answer paper only through online

payment gateway.

5. Candidate has to pay Rs.400/- for Typewriting as fees per subject (for both first & second paper) and Rs.500/- for Shorthand & Accountancy as fees per subject (for both first & second paper) for the Revaluation of answer papers only through Online payment gateway.

6. **The candidate, who apply for scanned copy of answer papers only are eligible to apply for revaluation. (Separate applications must be submitted for obtaining scanned copies of answer scripts and for revaluation)**

7. Candidates who have completely submitted the application may download the copy of the answer script from the same online portal through which the application was submitted.

8. Without submitting applications, if payment was made or for any other reasons wrong payment was made or any other case may be, the refund for such payments will not be provided.

9. The declaration of revaluation result will be notified in the website, **tndtegteonline.in**

10. It is **advised to avoid last hour rush** for submitting applications.

11. Applications cannot be submitted after 5:00 PM on the last date of submission.

**Sd/- Dr S VISAKAN**
**Chairman, BoE**